Registered No. M. 2330.

" SIDDHANTHAM "
Vol. 15—No. 12

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| | | |
|---|---|---|
| மலர் 15 | சித்திரபானு ஆண்டு மார்கழித் திங்கள்<br>1942ஆம் டிசம்பர்மீ | இதழ் 12 |

உள்ளுறை பக்கம்

| | |
|---|---|
| ஏழிசையாய் இசைப்பயனாய் ... | 433 |
| திருவாரூரர் ... | 437 |
| திருஞானசம்பந்தர் வாழ்க்கை ... | 446 |
| கீர்த்தனங்கள் ... | 453 |
| சைவத்தேர்வு வினாக்கள்—1942 ... | 457 |

பத்திராசிரியர் : திரு. வி. உலகநாத முதலியார்

சித்தாந்த மகாசமாஜம்
கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

1942 தனிப் பிரதி அணா 4.

சிவமயம்

# சமாஜ அறிக்கைகள்

1. நமது சமாஜப் பொதுக்கூட்டம் ஒன்று 6-12-42 ஞாயிற்றுக்கிழமை நடந்தது. தனவணிக நாட்டுச் சிவநேசர் திருக்கூட்டத்தினரும், பழநி சைவ சித்தாந்த சபையினரும், திருவாளர்கள் - துடிசைகிழார் சிதம்பரனார், கொழும்பு அருள் தியாகராசனார், K. இரத்தின வேலனார் ஆகிய அன்பர்களும் கடிதவாயிலாகவும் வேறு பல அன்பர்கள் நேரிலும் நமது 'சித்தாந்தம்' பத்திரிகையை நிறுத்தாமல் நடத்த வேண்டுமென்ற கருத்தையே தெரிவித்தமையாலும், நிறுத்துவது உசிதமென்று எவரும் தெரிவிக்காமையாலும் இப்போதுள்ள காகிதப் பஞ்சம் அகவிலை முதலியவைகளை முன்னிட்டு 1943-ஒல் பதினாறு பக்கங்கொண்ட அளவில் 'சித்தாந்தத்'தை நடத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆகையால் அங்கத்தினர் அனைவரும் தங்கள் ரூபா 2 சந்தாவை 5-1-1943-க்குள் காரியதரிசியிடம் செலுத்தும்படி வேண்டப்படுகின்றனர். செலுத்தாதவர்கட்கு ஜனவரிமீ 'சித்தாந்தம்' வழக்கம்போல் வி. பி. தபால் மூலம் அனுப்பப்படும்.

2. நமது சமாஜப் பொதுக்கூட்டம் ஒன்று 22-12-42-ல் சிதம்பரத்தில் (ரதோத்ஸவத் திருநாளன்று) மாலை 5 மணி முதல் மாலைகட்டித் தெருவிலுள்ள ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்யாசாலையில் நடைபெறும். சைவத் திருவாளர் - பண்டிதமணி - மு. கதிரேசச் செட்டியார் தலைமையில், ராவ்பகதூர் - சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், ந. சிவகுருநாதப் பிள்ளை, பூ. சமரபுரி முதலியார் ஆகிய அன்பர்களும் பிறரும் சொற்பொழிவாற்றுவார்கள்.

3. நமது சமாஜத்தைத் தோற்றுவித்துப் பலமுறை தலைமை வகித்து இறுதியாகத் திரிசிராப்பள்ளியில் சென்ற ஆண்டு நிறைவு விழாவை நடத்திவிட்டுப் பழநிமலை சென்று

உபந்யஸித்துத் தைப்பூசத்தன்று பழநிக்குமரன் பதமலர் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் (5-வது பட்டத்தினர்) முதலாண்டு குருபூசை மிகச் சிறப்பாக திருப்பாதிரிப்புலியூரில் வருகிற தைப்பூசத் திருநாளன்று (1943ஆம் ஜனவரிமீ 21உ வியாழக்கிழமை) நடைபெறும். அன்றும் அதற்கு முந்திய பிந்திய நாட்களிலும் சமாஜக் கூட்டங்கள் திருமடத்தில் நடைபெறும். விரிவான நிகழ்ச்சிமுறை அடுத்த இதழில் வெளிவரும். அன்பர்கள் அனைவரும் வருக.

4. நமது சமாஜ நிர்வாகசபைக் கூட்டம் ஆண்டறிக்கை, ஆண்டுக் கணக்கு முதலியவற்றை அங்கீகரிக்க 20-12-42 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் 'குகானந்த நிலய'த்தில் நடைபெறும். (முன் அறிவித்தபடி 12-12-42-ல் நடைபெறாது.)

5. நமது சமாஜத்தின் சைவப் புலவர் இளஞ்சைவப் புலவர் தேர்வுகளில் தேறியவர்கள் :—சைவப் புலவர் - இரண்டாவது வகுப்பு : திரு. கா. நாகேந்திரம் பிள்ளை, மூன்றாவது வகுப்பு : திரு. வி. நவரத்தினம், திரு. மு. தவராசா. இளஞ்சைவப் புலவர் :—இரண்டாவது வகுப்பு : திரு. வெ. கந்தசாமி. மூன்றாவது வகுப்பு : திரு. அ. சச்சிதானந்தம், திரு. நா. சிவராசா. இத்தேர்வுகளை நடத்தி உபகரித்த அன்பர்கள் :—திருவாளர்கள் - சு. அண்ணாமலை பிள்ளை, மு. மயில்வாகனனார், ம. வே. திருஞானசம்பந்தம் பிள்ளை. பரீக்ஷகர்கள் :—திருவாளர்கள் - கோவைகிழார், மயிலைகிழார். அனைவருக்கும் சமாஜம் நன்றி செலுத்துகிறது.

---

## தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை

இச்சபையின் 59-வது ஆண்டு நிறைவு விழா 1942ஆம் டிசம்பர்மீ 29, 30, 31-ந் தேதிகளில் சிவக்கவிமணி - சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெறும். அன்பர்கள் வருக.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

மாதத் தமிழ்ப் பத்திரிகை

மலர் பதினைந்து

**1942**

பத்திராசிரியர்

திரு. வி. உலகநாத முதலியார்

உதவிப் பத்திராசிரியர்

மு. அருணசலம் பிள்ளை, எம். ஏ.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

திருவருளகம், 22-ஏ, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர்

சென்னை

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை
சென்னை

சிவமயம்

# உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| அடிகளார் நினைவுக் குறிப்புக்கள்—கோவை கிழார் | ... 116 |
| ஆஸ்திக நாஸ்திக சம்பாஷணை | ... 277 |
| இப்போது நாம் செய்ய வேண்டிய தென்ன—அ. சோம சுந்தரம் செட்டியார் | ... 193 |
| இரங்கற் கடிதங்கள் | ... 149 |
| இரங்கற் கூட்டங்கள் | ... 154 |
| இரங்கற் பாக்கள் | ... 131 |
| இவ்வாண்டின் சமாஜ உத்தியோகஸ்தர்கள் | ... 171 |
| இறைபணி நிற்றல்—ர. காமாக்ஷியம்மையார் | ... 65 |
| ஏழிசையாய் இசைப் பயனாய்—G. கலியாணம் | ... 433 |
| காமாட்சி திருமணம்—ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் | ... 161 |
| கீர்த்தனங்கள்—மு. அருணாசலம் பிள்ளை | ... 453 |
| சமாஜ முப்பத்தாறும் ஆண்டு விழா—காரியதரிசி | ... 39 |
| சிவாக்கிர யோகிகள் உரை | 321, 353, 385, 417 |
| சீதையின் திருமணம்—காந்தருவன் | ... 293 |
| சீவகசிந்தாமணியும் சைவமும்—ஔவை துரைசாமிப் பிள்ளை | 206, 211, 250 |
| சைவ இளைஞர் மகாநாடு—என்றும் இளையான் | ... 168 |
| சைவ இளைஞர் மகாநாட்டுத் தலைமையுரை—ர. சண்முக சுந்தரம் செட்டியார் | 22, 90 |
| சைவ இளைஞர் மகாநாட்டுத் திறப்புரை—க. அரங்கசாமி முதலியார் | 33, 87 |
| சைவத் தேர்வு வினாக்கள்—1942 | ... 457 |
| ஞானியார் அடிகளின் பிரிவு—மு. கதிரேசச் செட்டியார் | ... 120 |
| ஞானியார் பெருமை—புழலை திருநாவுக்கரசு முதலியார் | ... 123 |
| தமிழ் இசைவாணர்—பத்திராசிரியர் | ... 260 |
| தமிழ்த் தாயின் தவப் புதல்வர்—பத்திராசிரியர் | ... 209 |

பக்கம்

திரிசிரபுர சைவ சித்தாந்த சபையின் 56-வது ஆண்டு விழா ... 94
திருஞானசம்பந்தர் வாழ்க்கை—கோவை கிழார் 401, 446
திருநீறு—ம. பாலசுப்பிரமணிய முதலியார் ... 173
திருமெய்ஞ்ஞானப் பயன் ... 376
திருவாரூரர்—P. தியாகராஜப் பிள்ளை 230, 241, 285, 437
திறப்புரை—சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் ... 1
தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 58-வது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகள்—ந. சிவகுருநாத பிள்ளை ... 44
ஷ்டி விழா தலைமையுரை—திரு. வி. உலகநாத முதலியார் ... 49
தோற்ற முண்டேல் மரணமுண்டு—வித்வான் - மு. இரத்தின தேசிகர் ... 129
தோன்றாத் துணை—பத்திராசிரியர் ... 273
நக்கீரரும் திருமுருகாற்றுப்படையின் பெருமையும்—கொழும்பு அருள் - தியாகராசா ... 197
நல் வரவேற்புக் கவி ... 10
நல் வரவேற்புப்பா ... 19
நான் கண்ட ஞானியார் சுவாமிகள்—கா. இராமநாதன் செட்டியார் ... 124
பக்தி—G. சுந்தரம் ஐயர் ... 261
மகாமகோபாத்யாயர் பண்டிதமணி ... 304
முப்பத்தாறுவது ஆண்டறிக்கை ... 12
முற்றுணர்வினர்—வித்வான் - மு. இராசாக் கண்ணனார் ... 126
மெய்கண்ட சாத்திரக் கட்டளை—மு. அருணாசலம் 305, 337
மெய்ப்பூசு நீற்றார் தைப்பூச மீற்றார்—ம. பாலசுப்பிரமணிய முதலியார் ... 97
வரவேற்புரை ... 7
வாழ்க்கையும் சமயமும்—கா. இராமநாதன் செட்டியார் 346, 369, 411

Reg. M. 2330

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன்னம்பலவன்
ஞானதரு வாணியைஉள் நாடு.

| மலர் 15 | சித்திரபானு ஆண்டு மார்கழித் திங்கள் 1942௵ டிசம்பர்௴ | இதழ் 12 |
|---|---|---|

## ஏழிசையாய் இசைப்பயனாய்*

[G. கலியாணம், M.A., Dip. Econ.]

தமிழ் மூவகைப்படும். இயல், இசை, நாடகம் என்பன. நாடகம் என்பது தமிழ்ச்சொல் அன்றென்பர். கூத்து என்பது தமிழ்ச்சொல். கூத்து இருவகைத்து. இலாசியம், தாண்டவம் என்பவை. ஒன்று வீரமானது; மற்றொன்று பெண்ணீர்மை பெற்றுவருவது.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின் இரண்டு, மூன்று நூற்றாண்டுகளுக்குத் தமிழ்நாடு மிக்க கீழ்நிலையடைந்திருந்தது. தமிழ் நாட்டு முடியுடை மூவேந்தரும் அழிந்தனர். பின்னர் ஆழ்வார்கள், நாயன்மார்கள் தோன்றினார்கள். நாட்டின் பேறு வேண்டி இசைப்பாடல்களைப் பாடினார்கள். வாகீசர் என்பதில் 'வா' என்பது இசையையும் குறிக்கும். சுந்தரரின் தாயார் பெயர் இசைஞானியார். பரி

*உயர்திரு. விபுலாநந்த அடிகள் திரிசிராப்பள்ளி சைவசித்தாந்த சபையில் 21-3-42-ல் செய்த சொற்பொழிவின் சாரம்.

பாடல் இசைத்தமிழ். தேவாரம் திருவாய்மொழி இவை இசை இலக்கியங்கள். பெரியோர்கள் தாம் கண்டு அனுபவித்து இன்ப அருள் பெற்றதைப் பிறரும் அடைய எண்ணினார்கள். சொற்பொழிவுகள் ஆற்றவில்லை. நூல்கள் எழுதவில்லை. பாடல் தொண்டு, உழவாரத் தொண்டு இவைகள் செய்தார்கள். கோயில் திருத்தி திருப்பணி செய்தனர். சங்கம், சபை ஒன்றுமில்லை. வாயில் பாட்டும், கையில் உழவாரப் படையும் அப்பர் பெருமானிடம் உண்டு. 7000 தேவாரப் பாடல்களில் சிலவற்றையாவது சைவர்கள் மனதில் சிந்திக்க வேண்டும். அவைகளைப் படித்தோர் உள்ளத்தில் யாத்தோர் உணர்ச்சி தோன்றும். சுரம், சுருதி இவை இசையல்ல. இசையின் ஒரு பகுதிதான். அவை ஒரு கட்டிடம் போலத்தான். அதனுட் குடியிருப்பது போன்றதே இசை. பரத சாத்திரத்தில் ப, ர, த என்பவை பாவம், இராகம், தாளம் இவைகளைக் குறிக்கும். 'ப' என்பது ஒரு மெய்ப்பாடு. இராகம், தாளம் என்பவை இசையை வருவிக்க உதவி செய்வன. அன்பர்கள் உள்ளத்தில் அன்புகலந் தெழுவதே இசைப்பாடல். அந்தப் பாடல் பாடி, பல உறுப்புகளான் ஆண்டவன் புகழினைக் காணப் பயன்படுகின்றன. "இருள் சேர் இருவினையுஞ் சேரா இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு" என்பது பொய்யா மொழி. உள்ள உணர்ச்சியைத் தூய்மைப் படுத்துவது இசை. இசைக்கு உருகுந் தன்மை உள்ளத்தில் தோன்றினால் மனிதன் வன்செயல் நீப்பான். ஆங்கில மகாகவி செகப்பிரியர், இசையில்லாதவன் வன் செயல்கண் படுவான் என்பார். தெய்வப் பாடல்களே அப்பருக்கு 'நாமார்க்குங் குடியல்லோம்' என்ற உறுதிப்பாட்டை உண்டாக்கிற்று; வீரத்தை ஊட்டிற்று.

சோழர்கள் ஆதிக்கம் வடநாடுவரை சென்றது. அவர்கள் பர்மா முதலிய நாடுகளைப் பிடித்தனர். வெற்றிக்குத் தலைவன் இறைவனே யென்று அவனுக்குப் பல ஆலயங்கள் கண்டனர். அறிவு மார்க்கமாக மாத்திரம் இருந்த சமண பௌத்த சமயங்கள் அழிந்தன. உள்ள உணர்ச்சி பொங்கிய

இசைகூடிய பாடல்களின் ஆற்றல் மீட்டும் நாடு நன்னிலை யடையக் காரணமாக இருந்தன.

யாழ்ப்பாணர், மதங்க சூளாமணியார் இவ்விருவரும் சம்பந்தர் பின்சென்றனர். ஆலயப்பிரவேசம் இப்பொழுது பேசுவது புதிது என்று எண்ணவேண்டாம். திருநீலநக்கர் என்ற அந்தணப் பெரியார் வீட்டில் யாழ்ப்பாணர் தங்குவதற்காக முத்தீவளர்க்கும் இடத்தில் இடங்கொடுக்க, தீக்கடவுளும் இசைவது போன்று வலஞ் சுழித்தெழுந்ததாகச் சொல்லப் படுகிறது.

'பாட்டுக்கு உருகும் தமிழ்ச் சொக்கநாதர்,' 'முத்தமிழ் விரகர்,' 'ஞானத்தின் திருவுருவை..........கானத்தின் எழுபிறப்பை' என்பன போன்ற கூற்றுக்களை நோக்கின் இசைப் பெருமை இனிது விளங்கும். சைவ சமயம் தனியரசு புரிந்தகாலத்தில் இருந்தனர் சுந்தரர் பெருமான். முடியுடை மன்னர் மூவரும் வணங்கினர். சேரமான் தோழரானார். அக்காலமே சைவமாகிய கோயில் பூர்த்தியான காலம். சுந்தரர் பாடிய திருவாரூர்ப் பதிகம் ஒன்றில் 'ஏழிசையாய் இசைப்பயனாய்' என்று ஒருபாடல் தொடங்குகின்றது. அது தத்துவத்தைக் கொண்டது. அன்போடிசைந்தது இசை. அது பக்திக்கு ஓர் அங்கமாயது. நாரதர் யாழால் கண்ணனைப் பாடினார். ஆண்டவன் ஆகாச வடிவினன்; சொல்லின் வடிவினன்; இசை வடிவினன்; அன்பு வடிவினன். நாத தத்துவத்திலிருந்து தோன்றியது இசையன்று. அன்பும் சேர்ந்தது. இசையின் உருவம், பொருள், தத்துவம் முதலியவற்றை ஆராயலாம். சம்பந்தர் - திருவீழிமிழலைத் தேவாரத்தில் 'பண்ணும் பதம் ஏழும்' என்று தொடங்கிப் பாடியுள்ள பாடல் கூர்ந்து நோக்கத்தக்கது. இசைவேறு, சொல்வேறு என்று இசையியக்கத்தோர் கூறுகின்றனர். "உண்ணின்றதோர் சுவை" என்பதால் சொல்லில்லையேல் இசைப்பயனில்லை யென்பது பெறப்படும்.

இசை ஏழு வகைப்படும். ஏழு சுரமாக அமைந்தது. அவை இயற்கையாக உண்டானவை. தாரம் என்பது முதலில் கண்டது. இப்பொழுது காந்தாரம் என்று வழங்குகின்றது.

தாரத்தினின்றும் அம்மொழி உண்டாகி இருக்கவேண்டும். சட்ஜ பஞ்சமமாக உழை தோன்றிற்று. அது நிஷாதசுரம். யானையின் ஓசை. சாமகானத் தொடர்புள்ளது. தார நரம்புடன் உழை நரம்பு ஒத்திசைக்கும். உழைக்கு ஐந்தாவது நரம்பு குரல். பெண்களுக்கு இயல்பாக உண்டாவது. அதினின்றும் இளி தோன்றிற்று. அதற்குப் பட்டடை என்ற பெயரும் உண்டு. சட்ஜம் தான் இளிநரம்பு. அதன் பின்னர் துத்தம் உண்டாயிற்று. இக்காலத்தில் பஞ்சமம் என்கின்றனர். விளரி தோன்றிப்பின் கைக்கிளை தோன்றியது. இவ்வகையாக ஏழு நரம்புகள் தோன்றின. 12 சுரஸ்தானங்கள், 22 சுருதிகள் உண்டு. கிரேக்க, ஆங்கிலேய நாடுகளில் ஏழு இருந்திருக்கின்றன. திருத்தம் பெறாத மொழிகளில் 5, 6 உடன் நின்று விடுகின்றன.

ஆனாய நாயனார் புராணத்தில் பஞ்சாக்கரத்தை எழுத்தெழுத்தாகக் குழலில் பாடினார் என்பது தோன்றுகின்றது. சராசரங்களுக்கு உற்சாகமும் அமைதியும் உண்டாயின. இறைவன் சர்வசங்காரகாலத்தில் வீணைவாசிப்பான் என்று அப்பர் சொல்கிறார். இராவணன் இசைப் பெரியான். இறைவன் சாமகானப் பிரியர் என்று பாடினான்.

பாணபத்திரர் இசை அழகிய இசை. இறைவன் விறகு வெட்டியாக நின்று பாடியது முல்லைப்பண்ணின் திறமான சாதாரிப்பண். "விரைசார் மலரோ னறியா விகிர்தன்" என்று தொடக்கத்த திருவிளையாடற் பாட்டும், அதைத் தொடர்ந்த மற்ற இரு பாடல்களும் இன்பம் தருவனவாகும். பாணபத்திரருக்குத் தொண்டு செய்ய இறைவன் வந்தது இசைப் பெருமை என்று அரசன் கூறுகின்றான். "தன் போல் என்பால் அன்பன்" என்பது குறிக்க இறைவன் சேரமானுக்கு "மதிமலி புரிசை-" என்று தொடங்கும் அறிமுகக் கடிதம் எழுதி பாணபத்திரரை அனுப்புகிறான். பாணபத்திரர் இருக்க இறைவன் பொற்பலகை யிட்டது இசைப் பெருமையை உலகினர்க்கு உணர்த்தும் பொருட்டன்றோ! யாழைப் பலரும் தொழுது வாங்கும் வழக்கம் பண்டைக் காலத்திலிருந்தது. மாதவி கோவலனிடமிருந்து

யாழைத் தொழுது வாங்கினாள் என்று சிலப்பதிகார ஆசிரியர் கூறுகிறார். உரோமாபுரி முதலிய பண்டை நகரங்களில் இசைக் கருவிகளைத் தெய்வமாகவும் வணங்கி வழிபட்டனர். உதயணன் கோடபதி யென்னும் யானையை இசையால் அடக்கினான். நவரசங்கள் எல்லாம் ஏழிசைகளில் பொருந்தும். நம் நாட்டினர் இறைவனை இசை வடிவமாகக் கண்டனர். அதனாலேயே சுந்தரர் பெருமான் இறைவனை "ஏழிசையாய் இசைப் பயனாய்" என்று போற்றிப் புகழ்ந்திருக்கின்றார்.

# திருவாரூரர்

[P. தியாகராஜப் பிள்ளை]

## XXIV

### தோழமைச் சிறப்பு

அறிந்து செல்வ முடையானு மளகைப்
 பதியாற் றோழமைகொண்
டுறழ்ந்த கல்வி யுடையானு மொருவன்
 வேண்டு மெனவிருந்து
துறந்த முனிவர் தொழும் பரவை
 துணைவா நினைத்தோழமை கொண்டான்
சிறந்த வறிவு வடிவமாய்த்
 திகழு நுதற்கட் பெருமானே.

—சிவப்பிரகாச அடிகள்

ஆரூரர்க்கு இருவர் சிறந்த தோழரானார்கள். அவர்களில் ஒருவர் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே. அவர் "தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்" என்று வலிந்து வந்து நண்பரானார் என்பதைத் திருத்தொண்டர் வரலாற்றில் 273-ம் பாடலில்

வாழிய மாமறைப் புற்றிடங்கொண் மன்னவ
னாரு ளாலோர் வாக்குத்
தோழமையாக வுனக்கு நம்மைத் தந்தனம்
நாமுன்பு தொண்டு கொண்ட
வேள்வியி லன்றுநீ கொண்ட கோலம்
என்றும் புனைந்துநின் வேட்கைதீர
வாழி மண்மேல் விளையாடுவாய் என்று
ஆரூரர்கேட்க எழுந்த தன்றே.

என்று சேக்கிழார் பெருமான் விளக்கினார். சுந்தரரை "அன்று முதல் அடியா ரெல்லாம் தம்பிரான் றோழ ரென்றே அழைந்தனர்." பாடலின் இசைக்கும் அறிவின் மேன்மைக்கும் ஆவல் கொண்டு . எம்பெருமான் ஆரூரரைத் தோழமை கொண்டார். இப்படிக் கடவுள் தோழமை பூண்டதனோடு நில்லாமல் அளவு கடந்த அன்புடைய சேரமான் பெருமாளோடும் நட்பாக்கி வைத்தனர். இம்மை இன்பங்க ளெல்லாம் துய்க்க வேண்டுமானால் ஒரு சிறந்த மன்னன் நட்பு போதுமன்றோ? பின்னளில் ஆரூரர் சேரநாடு சென்றபோது பெருமாணயனார் அவருக்குச் செய்த சிறப்புக்களின் பெருமைகளைப் பெரியபுராணத்தின் வாயிலாகத் தெரிந்து கொள்ளலாம். சிவபெருமான் செல்வத்திற்காக அளகை வேந்தனையும் அறிவிற்காக ஆரூரரையும் தோழராகக் கொண்டதுபோலவே திருவாரூரரும் அம்மைக்காகச் சிவபெருமானையும் இம்மைக்காகச் சேரமான் பெருமானையும் தோழராக் கொண்டார் என்று சொல்வது பொருந்தும்.

2. ஆரூரரது நட்பு இருநிலம் பிளக்க வேரூன்றியது. பிரியின், கன்றைப் பிரிந்த தாயின் நிலையடைவது. பேரரசராயினும் பெருமாணயனார் திருவாரூரருடன் உயிரும் உடம்புமாக இருந்தனர். பாண்டி நாட்டிலுள்ள பல திருவிடங்களையும் கண்டு வந்தபின் இருவருமாகச் சேரநாடு சேர்ந்தனர். கழறிற்றறிவார் அங்கு ஆரூரர்க்குப் பலவித விருந்துகளையளித்தனர். ஆரூரரும் அவ்விடம் பலநாள் தங்கினார். இப்படி இருக்கையில் அவருக்குத் திடீரென்று தியாகர் நினைவு

தோன்றி அவரைத் தன் வயமாக்கிற்று. என் செய்வார்? தியாகரும் சேரமானும் தமக்கு அரிய நண்பர்கள். அதனால் இவர்களில் எவரைவிட்டுப் பிரிந்திருப்பது என்ற மனக்குழப்பம் அடைந்தனர். ஆயினும் சுந்தரர் ஆரூரப்பனைத் தோழராக முதல் முதல் கொண்டதனாலும் அவரிடத்தில் நீண்ட நாள் பிணிப்புண்டதாலும் ஆரூர்க்கே மீண்டனர். ஆரூரர் என்ற சொல்லைக் கேட்டாலும் அவர் மின்னேற்றிய பொருள் போலாகி விடுவார்.

சேரமானையும் மறந்தவரில்லை. அதனால் மீண்டும் ஒரு தடவை தமது நண்பனைக் காண மலைநாடு அடைந்தார். அங்கிருக்கும் பொழுது இறைவன் திருவாரூரரை வெள்ளை யானையைச் செலுத்தி அழைத்தனர். சேரமான் அதனை முதலில் அறியார். இருந்தும், ஒன்றுபட்ட நெஞ்சுடைய நண்பர்களுக்குள் ஒருவருக்கு நிகழ்வது மற்றவர் எப்படியாவது உணர்ந்து கொள்வது இயற்கையாக இருப்பதால் சேரமானும் தனது உட்புல உணர்ச்சியால் ஆரூரரது செலவினை உணர்ந்துகொண்டு பரிமேல் ஏறித் தமது தெய்வ ஆற்றலினால் வானில் வன்றொண்டருக்கு முன்னே வணங்கிச் சென்றார். இவ்வுலக நீக்கத்திலும் இங்ஙனமே நட்பைத் தொடர்ந்து காண்கிறோம். இதனை நம்பியாண்டார் நம்பி "ஞான ஆரூரரைச் சேரரை யல்லது நாமறியோம், மானவ யாக்கையொடும் புக்கவரை" என்று பெரிதும் வியந்தார்.

3. இவ்வளவு நெருங்கிய நண்பராயிருந்தும் திருத்தொண்டத் தொகையில் (39. vi) "கார்கொண்ட கொடைக் கழறிற்றறிவார்க்கு மடியேன்" என்று சேரமானின் கொடைத் திறத்தைப் புகழ்ந்ததே யல்லாமல் அவர் தமக்கு இவ்வளவு நெருங்கிய நண்பராயிருந்தனர் என்பதைத் தம் பாடல்களில் வேறெங்கும் குறித்ததாகத் தெரியவில்லை. திருத்தொண்டத் தொகை பாடியது சேரருடன் நட்பு பூணும் முன்னேயாகும். ஆரூரர் சேரமானுடைய கொடைவளத்தைக் காதால் கேட்டிருந்தனர். தாம் அவரை நேரே கண்டு பழகி நட்புக் கொண்ட பின் அவரது தன்மைகளை எடுத்துப் பேசவில்லை. அதுபோலவே தனக்குக் கிடைத்த ஆரூரரது அரிய நட்பைப்

பற்றிச் சேரமானும் தனது "பொன்வண்ணத் தந்தாதி திருக்கைலாய வுலா, திருவாரூர் மும்மணிக் கோவை" ஆகிய சிறந்த நூல்களில் ஒன்றிலேனும் குறிப்பித்ததாகக் காணப் படவில்லை. கைலைக்கு மானவ யாக்கையொடு சென்று சிவ பெருமான் முன்னிலையில் தந்தமிழ் மொழியில் திருக்கை லாய வுலாவை மன்றேற்றும் பெறும்பேறு தனக்குத் திருவா ரூரால் வாய்க்கப் பெற்றும் இதனை ஒருகாலும் சேரமான் தனது நூல்களில் ஆரூரர் தோழமையைக் குறிக்காதது வியப்பைத் தருகின்றது. திருவாரூரரும் சேரமான் பெரு மாளும் ஒருங்கு வாழ்ந்து கைலை சென்றனர் என்ற செய்தியை முதன் முதன் நம்பியாண்டார் நம்பி தமது கோயிற்றிருப் பண்ணியர் விருத்தத்தில் பின் வருமாறு குறிக்கின்றார்.

"இறையும் தெரிகிலர் கண்டும் எழில்தில்லை யம்பலத்துள்
அறையும் புனற்சென்னி யோன்அரு ளால்அன் றடுகரிமேல்
நிறையும் புகழ்த்திரு வாரூர னும்நிறை தார்ப்பரிமேல்
நறையுங் கமழ்தொங்கல் வில்லவ னும்புக்க நல்வழியே."

4. ஆனால் சிவபெருமான் ஆரூரரோடு தோழமை பூண்ட செய்தி தேவாரத்தில் குறிக்கப்படுகின்றது. அதைப் பற்றி மாத்திரம் சுந்தரர் தமது பாடல்களில் குறிக்கா மல் இருக்கமுடியவில்லை. கடவுள் இவருக்குக் காட் டிய நெறிதானும் "நண்புவழி" அன்றோ. தாம் ஆட்பட்ட திறத்தைப்பற்றி அடியவர்கள் திருப்பாடல்களில் நன்றி காட்டும் பொருட்டுக் குறிக்கவே நேருகின்றது. மற்றைய நட்பெல்லாம் நாரற்றுப் போகக்கூடும். ஆனால் ஆண்டவன் இடத்தில் உண்டாகிய நட்பிற்கு அழிவுண்டோ! வாய்க்கு மிடங்களிலெல்லாம் தமக்குக் கிடைத்த தோழமையை நினைந்து நன்றி பாராட்டுகிறார். தேனூகிய திருவாசகத்தில் திருவாதவூரரும் இவ்விதமே தம்மை ஆட்கொண்ட திறத் தைப் பலவிடங்களிலும் பாராட்டுகின்றார். "போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்லாதெனத், தாதையார் முனி வுறத் தானெனை யாண்டவன்" எனக் காழிப்பிரான் திருவாய் மலர்ந்தருளியதும் நோக்கத் தக்கது. அப்பரோ பாழ்

அமணப் படுகுழியினின்றும் எடுத்தாண்ட பண்பை நினைந்து நினைந்து உருகிப் பாடினார்.

5. திருவாரூராரது நேயம் தியாகப் பெருமானை பிரிந்திருந்த நாளில்தான் நன்றாக வெளிப்பட்டு நிற்கிறது. திருவொற்றியூரில் சங்கிலி நாச்சியாரோடு சில நாள் வாழ்ந்த போது ஆரூரப்பனை நினைத்துக் கொண்டார். கதறத் தொடங்கிவிட்டார். "எத்தனை நாள் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே; எவ்வணம் நான் பிரிந்திருக்கேன், எங்ஙனம் நான் பிரிந்திருக்கேன்; என்செய நான் பிரிந்திருக்கேன்"; என்று புலம்புகிறார். தாம் இந்நிலத்தில் வாழ்வது ஆரூர்ப் பெருமானொடு ஒன்றாய் இருப்பதற்காகத்தான் என்ற முடிவைக் கொண்டனர். திருவொற்றியில் இருந்தபடியே பாடிய திருவாரூர்ப் பதிகத்தில் [51 (x)] தமக்குச் சிவபெருமான் தோழன் என்பதை "ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய, தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக்குடனாகி மாழை யொண்கண் பரவையைத் தந்தாண்டானை" என்று பாடினார். இங்கு ஒருவன் தன் நண்பனைவனுடைய குறைகளைத் தெரிந்து அவைகளைப் பொறுத்துக்கொண்டு அவன் விரும்பியதை நாடித் தரவேண்டும் என்பதைச் சிவபெருமானே நடந்து காட்டினதைப் பாராட்டுகின்றார். திருநள்ளாற்றுப் பதிகத்தில் (68) "அடியேற் கெளிவந்த தூதனைத் தன்னைத் தோழமை யருளித் தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும் நாதனை நள்ளாறனை யமுதை நாயினேன்மறந் தென்னினைக் கேனே" எனத் தமக்குச் சிவபெருமான் தோழமையருளினதையும் தம் பிழைகளை யெல்லாம் பொறுத்துக் கொள்வதையும் தம்மால் மறக்க முடியாதென்பதை யெடுத்து மொழிந்தார். பின்னும் கானப் பேருறை காளையைப் பாடுகையில் (84) "தூதனை யென்றனையாள் தோழனை நாயகனை" எனத் தமக்குச் சிவபெருமான் தோழனாக விளங்கினதைக் குறித்தார். தோழமை காரணமாகச் சிவபெருமான் தூதனானமையையும் இப்பாடல்கள் வெளியிடுகின்றன.

6. இப்படித் தோழமையளித்த பின்பு, சுந்தரர் சிவபெருமானிடத்தில் உண்மை நண்பனாகவே நடந்து கொண்டார். இரண்டு உண்மை நேயர்கள் தம் மனத்திலுள்ளவைகளை ஒருவர்க்கொருவர் மறைக்காது தெரிவித்துக் கொள்வதும் ஒருவர்க்குத் துன்பம் வந்தபொழுது மற்றவர் துணையை நாடுவதும் வழக்கமன்றோ! இங்கு சிவபெருமான் வேண்டுதல் வேண்டாமையிலா னாதலால் அவர் அடியாரிடத்தில் அன்பு ஒன்றை மாத்திரம் வேண்டுவார். தாம் அடியார்க்கு அருள்வதையே விரும்புவார். ஆதலால் திருவாரூரர்க்குப் பெரும்பேறு கிடைத்தது. எல்லாம் வல்ல பெருமானை நண்பராகக் கொண்ட நாவலூரர்க்கும் தங் குறைகளைத் தீர்த்துக் கொள்ளுதல் எவ்வளவு எளிதாயிற்று. அவர்க்கு எத்தன்மையான துன்பம் நேரினும் சிவபெருமானை தோழனாக நின்றும் வாயிலாக நின்றும் தீர்ப்பாராயினர். ஆரூரரும் "ஆரெனக் குறவமரர் ஏறே" என்று சிவபெருமானையே தமக்கு உற்ற துணையாகக் கொண்டார்.

7. உலகின்கண் மக்களின் விருப்பமெல்லாம் மண், பொன், பெண் என்ற மூவிடங்களில்தான் செல்லுகின்றன. சுந்தரர் மண்ணை விரும்பினதாக வரலாறு இல்லை. ஆனால் பெண்ணும் பொன்னும் தமக்கு வேண்டிய போதெல்லாம் சிவபெருமானிடத்தில் கேட்டும் பெற்றார். பரவையாரும் சங்கிலியாரும் தமக்குக் கிடைத்தது தம் தோழரான சிவபெருமானாலேயே யென்பதை 51-ல் "மாழை யொண்கண் பரவையைத் தந்தாண்டானை" என்றும், "நாயேனைப் பொருட்படுத்துச் சங்கிலியோடெனைப் புணர்த்த தத்துவனை" என்றும் எடுத்துக் கூறினர். பொன் வேண்டிய பொழுதும் தம் தோழரிடந்தான் சென்று கேட்டார். தோழர்க்குத்தான் ஒருவருடைய உண்மைநிலை தெரியும். அயலார்க்கு வெளித்தோற்றம் மாத்திரமே புலப்படும். பழமலையில் சிவபெருமான் பொன்னளித்ததை 25-ல் "உம்பரும் வானவரும் உடனே நிற்கவே யெனக்குச் செம்பொனைத் தந்தருளித் திகழும் முதுகுன்றமர்ந்தீர்" எனக் குறித்தார். திருப்புகலூரில் பொன் பெற்றதை 34-ம் பதிகத்தில்

வெளிப்படையாகக் கூறவில்லை. திருக்கடைக் காப்பில் "புகலூர் மேவிய செல்வனை" என சிவபெருமானைக் குறிப்பதால் பொன்பெற்ற பொழுதில் அதனையுடையானைச் செல்வன் என்றழைத்தனர் போலும். "இம்மையே தரும் சோறும் கூறையும்...யாதும் ஐயுறவில்லை" எனப் பாடுவதனாலும் பிறரை வாயில் வந்தபடி யெல்லாம் வீணைகப் புகழ்வதைக் காட்டிலும் புகலூரைப் பாடினால் அமருலகம் ஆளலாம் என்பதாலும் ஆரூரர் இங்கு பொருள் பெற்றனர் என்பது உய்த்துணரப்படும். வரலாறும் பொன் பெற்றதாகக் கூறி இதனை உறுதிப்படுத்துகின்றது.

௫. சிவபெருமானுடைய தோழமையின் அழுத்தம் சொல்லவொண்ணாதது. சுந்தரர்க்கு வேண்டியதைப் பிறர் கொடுப்பதற்குக்கூட மனம் பொறார். சேரமானிடம் ஆரூரர் பல பொருள்களைப் பெற்றுவந்தார். ஆனால் அப்பேரடியவரிடங்கூட ஆரூரர் ஒரு பொருளைப் பெறுவதில் சிவபிரானுக்கு விருப்பம் இல்லை. அதனால் சுந்தரர் வழியில் வரும்பொழுது திருமுருகன் பூண்டிக்கருகில் குறளைகளைக் கொண்டு அவைகளைப் பறித்திட்டுப் பின்பு தாமாக எல்லாப் பொருளையும் அளித்தார். இஃது வரலாற்று வழியாக அறியப்படுகின்றது. திருமுருகன்பூண்டிப் பதிகத்திலோ இச்செய்தி விளக்கமாகக் கூறப்படவில்லை. கொடிய ஆறலைப்போர் அங்கு வாழ்கின்றனர் என்பதைப் பற்றிப் பேசுவதனால் அவர்கள் இழைத்த அல்லலில் தாமும் துன்பம் பட்டிருப்பார் என்பதும், அவ்வேடர்களில் சிலர் இவருடைய பொருள்களைக் கவர்ந்து சென்றிருப்பர் என்பதும், அதனால் சிவபெருமானிடம் சென்று இப்பேர்ப்பட்ட கொடிய இடத்தில் அம்மையோடு தங்கியிருப்பது தகுதியன்று என்று பாடினார் என்பதும் 49-ம் பதிகம் தெரிவிக்கின்றது. இப்பதிகப் பாடல்களின் போக்கு தம் நேயனின் துன்பம் கண்டு வருந்துவது போலக் காணப்படுகிறது. இப்படியே சிவபெருமான் 32-ல் கோடிகரையில் தனித்து இருப்பதைக்கண்டு "அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே" என இரக்கமாகப் பாடினார்.

9. சிவபெருமான் தம் நண்பனின் குறைகளையெல்லாம் பொறுத்து, சுந்தரருக்கு இன்ப வாழ்வு அளித்தனர் என்பதைப் பல பாடல்களில் புகன்றுள்ளார். நண்பர்கள் பல படித்தரமாக இருக்கின்றார்கள். அறிவு புகட்டும் நண்பர் சிலர். நெறி தவறினால் இடித்துரைக்கும் நண்பர் சிலர். நண்பனுக்குத் தீங்குநேர்ந்தால் தனக்கு வந்ததுபோல் உடுக்கை இழந்தவன் கைபோல உதவுபவர் சிலர். நண்பன் எதை விரும்பினாலும் அதை செய்துகொடுக்க உடன்படுபவர் சிலர். இவர்கள் தமக்கு ஓர் இழிவு ஏற்படினும் பொருட்படுத்ாது நண்பன் வேண்டுவதைத் தேடித்தருவார். சிவபெருமான் சுந்தரருடைய இனிய பாடல்களாகிய தேனை உண்டு மயங்குபவர். தேனுண்ணும் விருப்பால் தம் நண்பன் விரும்பினதைத் தடையில்லாமல் நிறைவேற்றுகின்றார். ஓர் உண்மை நண்பனைத் தவிர ஓர் கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள ஊடலை தீர்க்க உடன்படுபவர் யார்? பரவையாருடைய அளவுகடந்த ஊடலைத் தீர்ப்பான் எம்பெருமானே உடன்பட்டார். இச்செய்தி ஏயர்கோன் கலிக்காமர் போன்ற அடியார்க்கு இடர் விளைத்தது. ஆனால் பிற்றைய நாள் அடியவர்களுக்கெல்லாம் தம் பாடலுக்குப் பொருளாய் நின்றது. ஒவ்வொருவரும் தியாகப் பெருமான், பரவையார் வீட்டிற்கு இரவில் நடந்து சென்ற திருத் தெருவில் ஒரு சிறு மணற்றுளியாய்க் கிடந்தேன் அல்லேனே என்றெல்லாம் பாடத் தொடங்கினர். சிவபெருமான் வேற்றுமையின்றி மண்ணுலக நண்பனைப் போலவே தமது சொல்தவறாமல் ஆரூரருடன் நட்புக் காட்டினர்.

10. பின்னும் நட்புக்காரணமாகத் திருவொற்றியூரில் சில திருவிளையாடல்களைக் காட்டியருளினார். சிவபெருமான் மகிழ மரத்தடியில் இருந்தால் தாம் சங்கிலியார்க்கு உறுதிமொழி கோயிலுள் செய்து விடுகிறேன். அது தனது திருத்தளிச் செலவிற்குத் தடை செய்யாது என்று வேண்டவும் அதற்கு உடன்பட்டவர் போலக் காட்டிக்கொண்டு சங்கிலியாரிடம் ஆரூரரை மகிழடியில் உறுதிமொழி தரவேண்டும் என்று கேட்கச்செய்தனர். இச்செயல்களெல்லாம் நோக்கினால் "மாப்பிள்ளைத் தோழன்" எனக் கூறப்படுவோன், மாப்பிள்ளை

யைப் பலவகையால் நகையாடுவது போலத் தோன்றும். பின்பு உறுதிமொழி தவறி, திருவொற்றி யெல்லை தாண்டினதும் கண்ணொளி மறைந்து துன்பெய்திப்பாடிய திருவெண்பாக்கப் பதிகத்தில் (89) "பொன்னவிலுங் கொன்றையினாய் போய் மகிழ்க்கீழ் இருவென்று சொன்னவெனைக் காணுமே சூளறவு மகிழ்க்கீழே என்னவல்ல பெருமானே" என்று மகிழடிச் செய்திகளை வெளிப்படுத்தினார். அதற்குமேல் ஊன்றுகோலளித்து, காஞ்சியில் ஒரு கண்ணளித்து மற்றைக் கண்ணையும் திருவாரூரில் தந்தருளினார். தம் நண்பன் தீமை செய்தாலும் அறப்படி அதன் பயனை துய்க்கவேண்டும் என்பதை இங்கு உலகினுக்கு எடுத்துக் காட்டினார். ஆரூரரும் தாம் செய்தன சில துரிசுகள் என்பதை ஒப்புக்கொண்டே பாடுகின்றார். தாம் செய்த பிழையை ஒப்புக்கொண்டு விட்டால் எந்த நண்பன் தான் இரக்கங் கொள்ளான். அதிலும் அருள் வடிவாக விளங்கும் எம்பெருமானுக்குச் சொல்லவும் வேண்டுமோ! கண்ணை அளித்ததுடன் நில்லாமல் பரவையார் பிணக்கையும் தீர்த்து வைத்தார்.

11. சிவபெருமானை விளிக்கும்போது வழங்கும் சொற்களும் பலவிடங்களில் ஒரே நேயனிடம் உரையாடுவது போலவே காணப்படுகின்றது. வழக்கில் உயர்ந்த படியிலுள்ள நண்பர்கள் ஒருவர்க் கொருவர் பேசும்போது 'நீர்', "உம்மை" என்ற சொற்களை வழங்குவதுண்டு. 5-ம் பதிகத்தில் "வல்ல தெல்லாம் சொல்லி யும்மை வாழ்த்தினும் வாய்திறந்தொன்று, இல்லை யென்னீர் உண்டும் என்னீர் எம்மையாள்வான் இருப்பதென்னீர்" என்ற அடிகள் ஆரூரர் சிவபெருமானிடத்தில் எவ்வளவு நெருக்கமாகவும் அச்சமின்றியும் உறவாடிப் பேசுகின்றார் என்பதைக் காட்டும். இன்னும் 14-ம் பதிகத்தில் "பிழைத்தது பொறுத்து ஒன்று ஈகிலாகில் இவரலாதில்லையோ பிரானார்" என்று துணிந்து கேட்கும் உரிமை ஒரு உயிர்த்தோழனுக்கே யுரியதாகும். 18-ல் "இவரது நடக்கை அறிந்தோமேல் நாம் இவர்க் காட்படோமே" என்று தம்மைக்கூட ஒருபடி உயர்த்திவைத்து பெருமை பேசுகின்றார். காரணம் அறிவு பொருட்டுக்

கொண்ட நண்பன் என்ன சொன்னாலும் அதை "மலர் தூவுதல்" போல நினைக்கின்றார். தமக்குத் தோழராகிய சிவபெருமான் உதவிடத்தாழ்த்தால் சுந்தரர் சிலவிடங்களில் சீற்றமும் கொள்கிறார். கண்ணிழந்து வருந்திப் பாடுபடும்போது ஐயன் கண்தாராது ஊன்றுகோல் தந்தபோது மிக வெகுண்டவராய் "ஊன்றுவதோர் கோலருளியுளோம் போகீர் என்றானே" ஒன்னலரைக் கண்டாற்போல் உளோம் என்றானே" என ஒருமைப்படவும் பேசத் தொடங்கினார். அதையும் பொறுத்துக் கொள்கின்றார். இன்னும் "பையரவா விங்கிருந்தாயோ" என்று கூடக்கேட்கலாமா? இவ்வளவு கடுமையாகப் பேசினால் யார்க்குத்தான் சினம் வராது. அதனால்தான் ஊன்று கோல் மாத்திரம் அருளினார். பின் போகப்போக ஆரூரர் தாம் செய்தது சரியன்று என்பதை உணர்ந்து வருந்திப்பாடப் பாட, கண்ணொளி அளித்து ஆட்கொண்டு வேண்டியவற்றை யெல்லாம் மகிழ்ந்து அளித்தார். இந்த நட்பைத் தமிழ் உலகம் எடுத்து எடுத்துப் போற்றுகின்றது.

# திருஞானசம்பந்தர் வாழ்க்கை

[கோவைகிழார் ம. இராமச்சந்திரனார்]

## சேர்க்கை

### விளக்கக் குறிப்புக்கள்

### கால நிலை

இந்திய சரித்திரத்தில் காணும் சில ஆண்டுக்குறிப்புக்கள்:

#### வடநாடு

| | | | |
|---|---|---|---|
| கி.மு. | 625 | மகாவீர மார்த்தாண்டர் | ...சமணமதத் தோற்றம் |
| ,, | 600 | கௌதம புத்தர் | ...புத்தமதத் தோற்றம் |

| | | | |
|---|---|---|---|
| கி.மு. | 350 | சந்திரகுப்தன் | ...சமணனாகித் தெற்கே சிரவண பௌகுளத்திற்கு வந்தவன். |
| ,, | 300 | அசோகன் | ...பௌத்தன்; இலங்கைக்குத் தூது அனுப்பினவன். |

## தென்னாடு

| | | | |
|---|---|---|---|
| கி.மு. 1000 கி.பி. 200 | | சேர சோழ பாண்டியர் ஆதிக்கம் ... | தமிழர் இயற்கைச் சமயம். |
| கி.மு. 200 கி.பி. 200 | | கடைச் சங்கத்தார் ... | சமண பௌத்தம் வரத் தொடங்கியது. |
| கி.பி. | 100 | திருவள்ளுவர் ... | பொதுநூல். |
| | | மணிமேகலை ... | பௌத்தம். |
| | | சிலப்பதிகாரம் ... | சமணம். |
| ,, | 300 | பல்லவர் தொடக்கம் சேரர் தனி நிற்றல் சோழ பாண்டியர் குன்றியது | ஆரியக் கலப்புத் தொடக்கம். |
| ,, | 600 | மகேந்திரவர்மப் பல்லவன் சமணர் ஆதிக்கம் | அப்பர்; வைதீக சைவம் புகுத்தியது. |
| ,, | 650 | கூன் பாண்டியன், மதுரை சமணர் ஆதிக்கம் 8 குன்றுகளில் 8000 குரவர்கள் | சம்பந்தர்; வைதீக சமயம். |
| ,, | 825 | சுந்தரர் ... | வைணவ ஆழ்வார்கள் |
| ,, | 900 | விசயாலயச் சோழ வம்சம் | சோழர் மேம்பாட்டின் தொடக்கம்; வைதீக சைவம்; ஆலய நிர்மானம். |
| ,, | 1000 | சோழர் மேம்பாடு; இராசராசன், இராசேந்திரன் | ஆலய மேம்பாடு திருமுறை ஓதுதல். |
| ,, | 1100 | உரையாசிரியர்கள் ... | அடியார்க்குநல்லார்-சமணம் |
| | | இலக்கண ஆசிரியர் ... | வீரசோழியம்-புத்தம் |
| ,, | 1250 | சைவவைணவகாவியங்கள் | சேக்கிழார்கம்பர்-வைதீகம் |

கி.பி. 1200 இலக்கணம் ... பவணந்தி சமணம் [ன்
,, 1300 சமய நூல்கள் ... {மெய்கண்ட சாத்திரங்க
பகவத் விஷய நூல்கள்
,, 1300 சைவ சமய மட நிலையங்கள்

## சித்தாந்த ஞானம்

சிவஞானபோதச் சூத்திரங்களின் கருத்துக்களும் அவற்றைக் குறிக்கும் சம்பந்தர் வாக்குகளும்.

1 உலகம் சடம்; உள்ள பொருள்; கர்த்தா உடையது; கர்த்தா சங்காரகாரணன்; முதற் காரணம் மாயை; முதற் கடவுள் அரன்.

" இருநில னதுபுன லிடைமடி தரஎரி புகஎரி யதுமிகு
பெருவளி யினில்அவி தரவளி கெடவிய னிடைமுழு வதுகெட
இருவர்க ளுடல்பொறை யொடுதிரி யெழிலுரு வுடையவன் "
—திருமறைக்காடு-திருவிராகம் செ. 7

" பிறவியொ டிறவு மானான் " செ. 1.
" தோற்றவன் கேடவன் " செ. 2.
—திருஇடைமருதூர் - வியாழக்குறிஞ்சி

" விரிந்தனை குவிந்தனை விழுங்குயி ருமிழ்ந்தனை "
திருப்புறம்பயம்-திருவிராகம் செ. 3

2 பெத்த உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரியும்; அத்தொழில்களுக்கு முதல்வன உயிரோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் இருப்பன்; தன் சத்தியோடும் இருப்பன்.

" புவிமுதல்ஐம் பூதமாய்ப் புலன்ஐந்தாய் நிலன்ஐந்தாய்க்
கரணம் நான்காய்,
அவையவைசேர் பயனுருவா யல்லவுரு வாய்நின்றான் "
—திருக்கழுமலம்-மேகராகக்குறிஞ்சி செ. 7

" உடலே உயிரே உணர்வே " —திருஅழுந்தூர்-இந்தளம் செ. 2

" ஒருவனுமே பலவாகி நின்றதொரு வண்ணமே "
—திருஇராமேச்சுரம்-காந்தாரபஞ்சமம் செ. 9

" கருவினாலன்றியே கருவெலா மாயவன்
உருவினாலன்றியே உருவு செய்தான் "
—திருத்தென்குடித்திட்டை-கோல்லி செ. 3

"ஒருடம்புள்ளே உமையொருபாகம் உடனாகி"
—திருப்பரங்குன்றம்-குறிஞ்சி செ. 3

3 உயிர் உண்டு: அது உடல், பொறி, சூக்குமஉடம்பு, பிராணவாயு, முதல்வன் இவைகளின் வேறு.

"எற்றுநீர் தீக்காலு மேலைவிண் இயமானனோடு
மற்றுமாதோர் பல்லுயிராய் மாலயனும் மறைகள்
முற்றுமாகி வேறுமானான்"
—திருமுதுகுன்றம்-பழந்தக்கராகம் செ. 2

"தாவி யவனுடன் இருந்துங் காணாத தற்பரன்"
—திருக்கோளிலி-பழந்தக்கராகம் செ. 9

"பூவினில் வாசம் புனலில் பொற்புப் புதுவிரைச் சாந்தின்
இன் நாற்றம்"
—திருவாலவாய்-திருநள்ளாறு-நட்டபாடை செ. 4

4 உயிரின் அறிவை மறைப்பது ஆணவம்; அதற்கு உதவுவது அந்தக்கரணம்; ஆனால் அது வேறு; உயிர் ஐந்து விதமாய் அறியும்.

"அடியார்கள் தடுமாற்றம் வஞ்சமிலர் நெஞ்சிருளும் நீங்கி
அருள் பெற்று வளர்வார்"
—திருத்தோணிபுரம்-சாதாரி-திருவிராகம் செ. 11

"அடிபணிந்தவர்கள் மேலைக் குற்றமதொழித்தருளும்
கொள்கையினன்"

"முன்னைய முதல்வினை அற அருளினர்"
—திருப்புறவம்-சாதாரி-திருவிராகம் செ. 5

5 உயிரால் அதிஷ்டிக்கப்பட்ட கருவிகள், விஷயங்களை அளந்து அறியும், அக்கருவிகள் உயிரை அறியா; உயிரே அறியும்; உயிரும் முதல்வனை அறியாது; முதல்வன் உயிர்க்கு உணர்த்தினும் விகாரியாகான்.

6 சுட்டறிவால் அறியப்படுவது அசத்து; முதல்வன் எல்லாவற்றாலும் அறியப்பட மாட்டான்; முதல்வன் சிவசத்து.

"ஓதியாரும் அறிவாரில்லை ஓதி உலகெலாம்
சோதியாய் நிறைந்தான்" —திருவையாறு-இந்தளம் செ. 7

"மண்ணொடு நீர் அனல் காலோடு மதியிரவி
எண்ணில்வரும் இயமானன் இகபரமும்—பேராளன்"
—திருவெண்காடு-சீகாமரம் செ. 3

"நிலம்தண் நீரோடு அனல்கால் விசும்பின் நீர்மையான்"
—திருஅரிசிற்கரைப்புத்தூர்-காந்தாரம் செ. 7

"இன்னவுரு இன்னநிறம் என்றறிவதேல் அரிது"
—திருவைகாவூர் செ. 4

7 சிவம் அசத்தினை அறியாது; உயிர் சத்து, அசத்து இரண்டினையும் அறியும்; ஆனால் இரண்டும் ஆகாது.

8 உயிர் தன்னியல் பறியாது கருவிகளால் மயங்கி நிற்கும்; சிவம் உயிர்க்கு அதன் இயல்பை உணர்த்தும்; உயிர் சிவம் நாடிச் செல்லும்.

"செடியாய உடல் தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்"
—திருப்புள்ளிருக்குவேளூர்-சீகாமரம் செ. 11

9 சிவத்தை நாட உயிர் சிவோகம் பாவனை செய்யும், பஞ்சாக்ஷரம் மூலமாய்.

"வந்தித்திருக்கும் அடியார் தங்கள் வருமேல் வினையோடு
பந்தித்திருந்த பாவந்தீர்க்கும்"
—திருவண்ணாமலை-தக்கேசி செ. 7

"தொழுதுபொழுது தோத்திரங்கள் சொல்லித் துதித்து நின்று
அழுதுநிற்கும் அன்பு செய்வார் அல்லல் அறுப்பார்."
—திருக்கானூர் - தக்கேசி செ. 11

"காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே"
—நமச்சிவாயத்திருப்பதிகம் செ. 1

10 சிவபணி வழுவாது செய்தல் வேண்டும்; அதனைச் செய்யும் உயிரை ஆணவம் தாக்காது; அதற்கு மாயா கன்மங்களும் இல்லை.

"நாச மாம்வினை நன்மை தான்வரும்——ஈசன்
கூசி வாழ்த்துதுங் குணம தாகவே"
—திருஇந்திரநீலப்பருப்பதம்-இந்தளம் செ. 4

"கையால் தொழுது தலைசாய்த்து உள்ளம் கசிவார்கள்"
—திருப்பாசூர்-காந்தாரம் செ. 3

11 சிவம் உயிர்க்கு அறிந்தும் அறிவித்தும் உபகரிக்கும்; சிவ நிஷ்டையில் நிற்பவரே சிவத்தின் சீபாதம் அடைவர்.

"பத்திப்பேர் வித்திட்டே பரந்தஐம் புலன்கள்வாய்ப்
பாலே போகாமே காவாப் பகையறும் வகைநினையா
கழுமல வளநகரே"
—திருக்கழுமலம்-வியாழக்குறிஞ்சி செ. 7

"ஒருரு வாயினை—நீள் நிலத்தே" (திருவெழுகூற்றிருக்கை)

"மேவி லொன் றர்விரி கசைவுற்ற இரண்டினர் மூன்றுமாய்
நாவின் நாலர் உடலஞ்சினர் ஆறர் ஏழோசையர்
தேவில்எட்டர் திருவாஞ்சியம் மேவிய செல்வனூர்"
—திருவாஞ்சியம்-இந்தளம் செ. 3

12 ஜீவன் முன் தன் மும்மலங்களை அறக் களைவன்; சிவன் அடியார், சிவவேடம், சிவலிங்கம் இவைகளைச் சிவமாக வழிபடல் வேண்டும்.

"கன்னியர் நாள்தோறும் வேடமே பரவும்"
—திருக்கழுமலம் - குறிஞ்சி செ. 6

"திருவாஞ்சியத்து அடிகள்பாதம் அடைந்தார் அடியார்
அடியார்கட்கே."
—திருவாஞ்சியம்-இந்தளம் செ. 9

"தொண்டர் தொண்டரைத் தொழுதடி பணிமின்கள்
தூநெறி எளிதாமே"
—திருக்கடிக்குளம்-நட்டராகம் செ. 10

"தொண்டரொடு கூடித் துதைந்து நின்ற தொடர்பைத்
தொடர்வோமே" —திருவலஞ்சுழி-பழம்பஞ்சரம் செ. 6

## தொண்டரோடு கூட்டுக் காணல்

### சம்பந்தருடன் உடனிருந்து திருத்தொண்டு புரிந்தோர்

திருநீல நக்கர், முருகர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், சிறுத்தொண்டர், குங்கிலியக்கலயர், நின்ற சீர்நெடுமாறர், மங்கையர்க்கரசியார், குலச்சிறை நாயனூர், சிவபாத இருதயர்,

பகவதியார், நம்பாண்டார், மயிலைச் சிவநேசர், கொல்லி மழவன், திருநாவுக்கரசர், அவருடன் தொண்டுபுரிந்த அப்பூதியடிகள், மகேந்திரப் பல்லவனார் முதலியோர்.

## அற்புதச் செயல்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஞானப்பால் உண்டு அருள் பெற்றது ... | சீகாழி |
| 2. | திருத்தாளம்பெற்றது ... | கோலக்கா |
| 3. | முத்துச் சிவிகை பெற்றது ... | நெல்வாயில் |
| 4. | உபநயனத்தின்போது ஐந்தெழுத்தை ஓதினது ... | சீகாழி |
| 5. | சொற்பொருள் அணிப்பாக்கள் ... | சீகாழி |
| 6. | கொல்லிமழவன் மகளின் முயலக நோய் நீக்கியது ... | பாச்சிலாச்சிராமம் |
| 7. | குளிர்ச்சுரம் நீக்கியது ... | திருச்செங்கோடு |
| 8. | முத்துப் பந்தர் ... | பட்டீச்சரம் |
| 9. | வேள்விக்குப் பொற்கிழி ... | ஆவடுதுறை |
| 10. | யாழ்முறி ... | தருமபுரம் |
| 11. | விடம் நீக்கியது ... | மருகல் |
| 12. | பொற்காசு பெற்றது ... | வீழிமிழலை |
| 13. | கதவு அடைக்கப் பாடியது ... | மறைக்காடு |
| 14. | பாண்டியன் சுரம் நீக்கியது ... | மதுரை |
| 15. | வாதங்கள், ஏடு, நெருப்பு மூட்டியது ... | மதுரை |
| 16. | ஓடம் விட்டது ... | கொள்ளம்பூதூர் |
| 17. | புத்தன் தலை இடி ... | போதிமங்கை |
| 18. | ஆண்பனை பெண்பனை ஆக்கியது ... | திருவோத்தூர் |
| 19. | பூம்பாவை எழுப்பியது ... | மயிலை |
| 20. | திருமணத்தில் சோதி கலப்பு ... | நல்லூர்ப் பெருமணம் |

## பிற சமயத்தார் இந்து சமயம் தழுவினது

| | | | |
|---|---|---|---|
| 1. | கிரேக்கர் | ஆண்டியால் சிடாஸ் அவன் தூதன் ஹிலியாடோரஸ் | 115— 135 கி.மு. |
| 2. | ஹூணர் | தோரமணன் | 500— 502 கி. பி. |
| 3. | ,, | மிஹிரகுலன் | 502— 542 ,, |
| 4. | சமணன் | பிட்டி தேவன் (விஷ்ணு வர்த்தனன்) | 1115—1141 கி. பி. |

# கீர்த்தனங்கள்

[பின்வரும் மூன்று கீர்த்தனங்களும் அரசாங்கத் தொன்னூல் நிலையத்துள்ள ஓரேட்டுப் பிரதியிற் காணப்பட்டன. தமிழ்ப்பாட்டுக்கள் வேண்டும், தமிழிசை வளர வேண்டும் என்ற உணர்ச்சி பெருகி வருகிற இக்காலத்தில் இவை பயனுடையனவாகும். ஏட்டிலே ஆசிரியர் பெயர் காணப்படவில்லை. 2, 3-ம் கீர்த்தனங்களில் காணும் இராகமும் தாளமும் ஏட்டிலே கண்டவை.

—மு. அருணாசலம்]

## 1. கச்சி ஆனந்த ருத்திரேசர் கீர்த்தனை

### பல்லவி

ஏனிந்தப் பெண்ணினை இடத்தினிலே வைத்திங்(கு)
இருக்கிறீர் சொலும் ஐயரே

### அனுபல்லவி

தேனைந்து மலர்செறி - ஆனந்த முயர்சோலை
தானந்த முறுங்கச்சி - ஆனந்த ருத்திரேசரே (ஏன்)

### சரணங்கள்

1. வில்லடி படும்போதும் மெய்தனிலே நோவக்
கல்லெறி படும்போதும் காவலன் பிரம்பினால்
நல்லடி படும்போதும் நாடிப்பயந் தீர்த்திட
வல்லவள் இவளென்றே வைத்தீரோ சாமிநீர் (ஏன்)

2. மாதவ ரிஷிகளால் வரும்ஆனை புலிபாம்பு
மானொலிக் கஞ்சினீரோ மதனன்பா ணத்தினாலே
காதலா னீரோஅல்லால் கங்கைத னக்குப்போட்டிக்
காட்டிச் சண்டைமூட்டிக் களரிபார்க்க வைத்தீரோ ()

3. இமய கிரியுதவும் உமையிடத் துறிலுயிர்
இன்பந் தழையு மென்றோ ஏழையடி யார்க்கெல்லாம்
தமதுளத் திருள்நீக்கிச் சமமிரு வினையாக்கிச்
சமயமீ தெனநோக்கிச் சத்திநிபாத மாக்கவோ (ஏன்)

## 2. திருமயிலைக் கபாலீசர் கீர்த்தனை

ஆனந்த பைரவி

**பல்லவி**

சூலபாணியர் கபாலீசர் - இவர்
தொண்டர்க்கு மகா நேசர் (சூல)

**அநுபல்லவி**

ஞாலமெ லாம்புகழுந் திருமயி லாபுரி
நண்ணுங் கற்பகவல்லி நாயக ராந்திரி (சூல)

**சரணங்கள்**

1. மெய்யன்ப ரெனும்வாத ஆரூருக்காய்
மேலவர் உள்ளங் களிகூரச்
செய்யுந் திருவிளை யாட்
டெல்லாம் அறிவீர்களே
பொய்யல இவரால் மெய்ப்
போகம் பெறுவீர்களே (சூல)

2. திருநாவுக் கரையருக் காக - இவர்
செய்த கருணை மூன்று லோகத்
தரும்நாளுந் துதித்திடுஞ்
சரித்திரம் அறியீரோ
அரியாரணனுங் காணு
தவரெனக் குறியீரோ (சூல)

3. நம்பியா ரூரர்க்கா யன்று - தூது
நடந்தார் திருவா ரூரிலென்று
அம்புவி யெலாஞ்சொல்வ
தறியீரோ மறைபுகழ்
உம்பர்க்கர சிவர்தாம்
ஒளிர்செஞ்சுடர் போல்திகழ் (சூல

4. திருஞான சம்பந்த மூர்த்தி - உள்ளம்
தெரிந்தவ ரெண்ணமெலாம் பூர்த்தி
பரிவா யியற்றிப்பூம்
பாவைக்குயிர் தந்தாரே
பெருஞ்சீர் வாயிலார்முத்தி
பெறவிடைமேல் வந்தாரே (சூல)

## 3. திருஞானசம்பந்தர் சரித்திரக் கீர்த்தனை

**கலியாணி - ஆதி தாளம்**

**பல்லவி**

ஞானசம் பந்தர் திருவடி பூசித்தால்
நன்மைபெற் றுய்யலாம் நெஞ்சே (ஞான)

**அனுபல்லவி**

வானளா வியசோலை மாடமா ளிகைசூழும்
வளமும்பன் னிருபேரும் மருவும்சீ காழிவாழ்()

**சரணங்கள்**

1. பார்புகழ் மறையோர் கவுணியகோத் திரச்சிவ
பாத இருத யரும் - அவர்
பத்தினியாம் பகவதி யாருஞ் செய்தவப்
பயனால் அண்டத் தவரும்

ஆர்வமுற ஆதிரை நாளி லுதித்தந்த
ஆண்டுமுதல் மூவாண்டில் அன்னையுமை யாள்தந்த
பேர்வளர் ஞானப்பா லருந்திச் சி வானந்தப்
பெருமான்பாற்கோலக்காவிற்பொற்றாளம் பெற்றுவந்த.

2. திருவரத் துறையத்தன் பால்முத்துச் சிவிகைபொற்
சின்னங் காளந்தாரை - யெங்குந்
திகழ்முத்துக் குடைபெற்றே ஓங்குந்திருப்பாச்சிலாச்
சிராம மெனுமூரைப்

பெருமையொடுஞ் சேர்ந்து மழவன் புதல்வியுற்ற
பிணியகற்றி யகன்று பேசுங் கலைகளகற்ற
அருந்தவர் வாழ்செங்குன் றூரிலன் பரைப்பற்ற
அணுகி யொறுக்கும்நளிர் சுரந்தீர்த் தருளைப் பெற்ற ()

3. நீடுபுகழ் திருப்பட் டீச்சுரத் தத்தன்பால்
நித்திலப் பந்தரும்சீர் - நாளும்
நிலவு மாவடுதுறை யினிற்றந்தை செய்வேள்வி
நிறைவேறும் படியுலகோர்

தேடுதற்கரிய பொற்கிழி பெற்று நீடிய
செல்வத் திருமருகல் சேர்ந்தங்கு நாடிய
ஆடக வணிக னுயிசோர மூடிய
அரவின் விடமகல அண்ணலைப் பாடிய (ஞான)

4. வீழி மிழலைதன்னில் அன்பர்கள் பசிதீர்க்க
வேண்டிப் படிக்காசு - நித்தம்
விமலரளிக்கப் பெற்றே திருமறைக் காட்டினில்
மேவி மெய்ப்புகழ் வீசு

ஊழி முதல்வன்வாழுந் திருக்கோயிற் கதவங்கள்
ஓங்கும்வேதத் தால்மூடப் பட்டிருந்ததைத் திங்கள்
வாழ்சடை யானையப்ப ரோடும் பாடித் தங்கள்
மகத்துவத்தாற் றிறக்கவும் மூடவுஞ்செய்த எங்கள் (ஞா)

5. வையம் புகழ்மதுரை மாநகர்தனிற் பாண்டி
மாதேவி யாரழைக்கச் - சென்று
மடத்திருக்க அமணர் கனலிடவுதை மன்னன்
மருங்கேவி அன்பர் செழிக்கச்

செய்ய அவ்வழற் சுரம்போல் மன்னன் தனைத்தீங்கு
செய்தத னலவன் அழைத்திடச் சென்றங்கு
பொய்யம ணர்கள்செய்த சுரமனை லோடு தேங்கு
புனல்வாதமும் வென்று விபூதியை யளித்தோங்கு (ஞா)

6. நலமிகுந் திருக்கொள்ளம் பூதூர்சேரப் பொன்னி
நதிப்பிர வாக மீறி - யோங்க
நாத ரடியவரை ஓடத்தேற்றித் தாமே
நடத்தி யக்கரை யேறி

இலகுமா லயத்துட் சென்று சேவிக்கும்போது
எதிருற்ற போதமங்கை சாக்கியர் செய்வாது
பலவும் வென்றுதிரு வோத்தூ ரமணர்தீது
பகரவாண் பனையைப் பெண்பனையாம் பதிகமோது. ()

7. திருமயி லையிற்சிவ நேசசெட்டி யார்முன்
செய்தவக் கொடியொன்று - சர்ப்பந்
தீண்டவவர் அங்கத்தை மீண்டும்பூம் பாவையாச்
செய்தப் பதியை யகன்று

பெருமண நல்லூரில் நம்பாண்டா ரெனுமொரு
பெரியோர் பெண்ணைமணம் புரிந்தபின் அதில்வரு
மிருவினை யாகாதென் றவரோடின் பந்தரு
மெந்தை சபாநாதர் இணையடி சேர்திரு (ஞான)

# சைவப் புலவர் தேர்வு—1942

## இலக்கியப் பகுதி

மூன்று மணி நேரம்] [நூறு மார்க்குகள்

1. கீழ்வருவனவற்றுள் நான்குக்குக் குறிப்புரையெழுதுக: காத்தாள்பவர் காவலிகழ்ந்தமையால், உயர்ந்தேன் மனை வாழ்க்கையும், வீடு பிறப்பையறுத்து மெச்சினர், மானுங்காரத் தீரியல்பாய், நால்வர்க்கு நெறிகளன்று சொல்லாகச் சொல்லியவா தோன்றும்.
2. பைங்குவளைக் கார்மலரால் என்ற பாட்டிலுள்ள நுட்பங்களைச் செவ்வையாக விளக்குக.
3. சேர்ந்தறியாக்கையான், மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார், நானார் என் உள்ளமார், பப்பற வீட்டிருந்துணரும் நின்னடியார் என்ற தொடர்களிலுள்ள பொருட்செறிவைத் தெளிவாகக் கூறுக.
4. திக்கடாநினைந்து, அம்பளிங்கு பகலோன் பாலடைப்பற்று, பண்ணியதழல்காய் பாலளா நீர்போல் என்ற

திருவிசைப்பாப் பகுதிகளை விளக்கி உவமைகளைத் தெளிவு படுத்துக.

5. "அருச்சனை பாட்டேயாகும்" என்று சேக்கிழார் சுவாமிகள் சிவபெருமான் திருவாக்கில் வைத்துக் கூறுவதைத் தகுந்த ஆதாரங்களோடு நிலை நாட்டுக.

6. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவெண்ணெய் நல்லூரிலிருந்து புறப்பட்டுத் திருவாரூர் செல்லும் வரை நிகழ்ந்தனவற்றை விடாது கூறுக.

7. தில்லையில் நம்பியாரூரர் தரிசனம் செய்ததைச் சேக்கிழார் எவ்வாறு விளக்குகிறார் என்பதைத் தகுந்த மேற்கோள்களோடு விவரித்தெழுதுக.

8. விண்டு வீச்சரம், அகத்தியேச்சரம், மதங்களமாதவேச்சரம் ஆகியவற்றின் வரலாற்றைக் காஞ்சிப் புராணம் எவ்வாறு விவரிக்கிறது?

9. தழுவக்குழைந்த படலத்துள் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மைகளுள் முக்கியமான இரண்டினைத் தெளிவாகக் கூறுக.

## சாத்திரப் பகுதி

மூன்று மணி நேரம்] [நூறு மார்க்குகள்

1. விஞ்ஞான கேவலரைப்பற்றிச் சிவநெறிப் பிரகாசம் கூறுவதை விவரிக்க.

2. சுத்த மாயா லக்ஷணத்தை மேற்படி நூல் எவ்வாறு விளக்குகின்றது?

3. ஐந்து மலங்கள் யாவை? அவற்றைப்பற்றி மேற்படி நூல் கூறுவதைத் தெளிவாக எழுதுக.

4. புத்தி தத்துவத்தில் அகங்காரம் தோன்றும் வகையை மேற்படி நூல் எவ்வாறுரைக்கின்றது?

5. தத்துவங்களுள் சுத்தம் சுத்தாசுத்தம் அசுத்தம் என்ற மூவகைப் பிரிவினையின் உண்மையையும் அவசியத்தையும் மேற்படி நூல் எவ்வாறு விவரிக்கின்றது?

6. முதல்வன் முதற்காரணனல்லன் என்பதைச் சிவஞான பாடியம் எவ்வாறு விளக்குகின்றது?

7. சுத்த வித்யா தத்துவத்தைப்பற்றி ஷெ பாடியம் கூறுவதைத் தெளிவாக எழுதுக.
8. சிற்சத்தி துணைக்காரணம் என்பதைபற்றிச் சிவஞான சுவாமிகள் கூறுவதென்ன?
9. சுட்டுப்பொருள் அசத்து என்பதைத் தகுந்த ஆதாரங்களோடு விளக்குக.
10. இருதிற னறிவுளதிரண்டலா ஆன்மா என்பதைச் செவ்வையாக விவரிக்க.
11. பன்னிரண்டாம் சூத்திரத்துக்கு இரண்டு பக்கங்கட்கு மேற்படாமல் உரையெழுதுக.

# இளஞ்சைவப்புலவர் தேர்வு—1942

## இலக்கியப் பகுதி

இரண்டரை மணி நேரம்] [நூறு மார்க்குகள்

1. ஆட்பாலவர்க்கருளும் வண்ணம், புறம்பயம் நம்மூரென்று போயினரே, உயிராவணமிருந்து உற்று நோக்கி, தன்னை முன்னம் நினைக்கத்தருவான் என்ற தேவாரத் தொடர்கட்குக் குறிப்புரை எழுதுக.
2. யானெனதென் றவரவரைக் கூத்தாட்டுவான், எட்டினோடிரண்டும் அறியேன், புணர்ப்பதொக்க எந்தை என்ற திருவாசகச் சொற்றொடர்களுட் பொதிந்துள்ள நுட்பங்களைத் தெளிவாக விவரிக்க.
3. திண்ணன் விற்பிடிக்கின்றான், சிலையினைக் காப்புக்கட்டும், உற்றநோய் தீர்ப்பதுவுக்கூன் என்ற பகுதிகட்குத் திரு. சி. கே. சு. முதலியார் கூறியுள்ள உரையைத் தொகுத்துக் கூறுக.
4. முன்புசெய் தவத்தி னீட்டம் என்ற தொடரிலுள்ள வரலாற்றை உரையாசிரியர் எவ்வெவ் மேற்கோள்களோடு விவரிக்கிறார்?

5. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தொடர்புடைய மூன்று நாயன்மார் வரலாறுகளைச் சுருக்கமாக எழுதுக.
6. ஆதிபகவன் என்ற பிரயோகத்தில் கடவுளின் மூன்று நிலைகளைத் திரு. வி. க. எவ்வாறு விளக்குகிறார்?
7. வானின்றமையா தொழுக்கு, மலர்மிசை ஏகினான் என்பவற்றுக்குக் குறிப்பெழுதுக.
8. அறவாழி அந்தணன் யாவன்? அவன் ஏன் அப்பெயர் பெற்றான்? விவரிக்க.

## சாத்திரப் பகுதி

இரண்டரை மணி நேரம்] [நூறு மார்க்குகள்

1. திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் ஆகிய இரண்டு நூல்களில் ஒத்த கருத்துடைய மூன்று பகுதிகளை எழுதுக.
2. சிவஞானபோதம் ஐந்தாம் சூத்திரப் பொருளைச் சுருக்கமாக எழுதுக.
3. சிவஞான சித்தியார் ஏழாவது சூத்திரத்துட் கூறப்படுவதை ஒரு பக்க அளவில் எழுதுக.
4. இருபாவிருபது என்ற நூலுள் தமது குருவை ஆசிரியர் எவ்வாறு விசேடிக்கிறார்?
5. ஐந்தெழுத்தைப்பற்றி உண்மை விளக்கம் கூறுவதைத் தொகுத்துரைக்க.
6. பாலாழி மீனாளும் பான்மைத்து, பாற்கலன்மேற் பூசை என்பவற்றுக்குக் குறிப்பெழுதுக.
7. இருமலத்தார்க்கில்லை உடல் வினையென்செய்யும் - விளக்குக.
8. அருவான் உருவான் அருவுருவமல்லான் - இம்மூன்று நிலைகளை விவரிக்க.
9. மாயாவாதி சங்கற்பத்தையும் அதன் நிராகரணத்தையும் இரண்டு பக்கங்கட்கு மேற்படாமல் சுருக்கமாக எழுதுக.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 15 No. 12

# சமாஜ வெளியீடுகள்

## CATALOGUE OF SAMAJAM BOOKS

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| அப்பர் தேவாரம் | ... | 1 | 0 |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் | .... | 0 | 12 |
| திருவாசகம் ,, | .... | 0 | 10 |
| ,, (பல ஆராய்ச்சி அகராதிகளுடன்) | .... | 0 | 12 |
| திருவாசகம் மூலம் | ... | 0 | 2½ |
| திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு—குறிப்புரையுடன் | .... | 0 | 9 |
| ௮, ௯ திருமுறைகள் ,, | .... | 1 | 2 |
| திருமந்திரம் — (இரண்டாம் பதிப்பு) | .... | 1 | 0 |
| பதினொராந் திருமுறை ,, | .... | 0 | 11 |
| மெய்கண்டாரும் சிவஞான போதமும் | .... | 0 | 8 |
| சங்கநூற்புலவரகராதி | .... | 0 | 1 |
| தலயாத்திரைப் படம் | .... | 0 | 1 |
| திருப்புகழ் (அருணகிரியார் அருளியவை முற்றும்) | | 3 | 0 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை | ... | 0 | 10 |
| சீவக சிந்தாமணி | .... | 1 | 8 |
| சிவஞானபாடியம் | .... | 1 | 0 |
| சிவஞானபோதச் சிற்றுரை | .... | 0 | 8 |
| சிவஞான சித்தியார் உரை | .... | 0 | 12 |
| சிவப்பிரகாசம் மூலமும் உரையும் | .... | 1 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் | .... | 1 | 0 |
| சித்தாந்த சாத்திரம் மூலமும் உரையும் | .... | 3 | 4 |

தபாற்கூலி, பார்சல் செலவு முதலியன வாங்குவோர் செலுத்த வேண்டும். முன்பணம் அனுப்புக.

**சைவ சித்தாந்த மகா சமாஜம்**
22-A, *கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை*

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, by T. V. Volaganathan (Publisher) for the Saiva Siddhanta Maha Samajam. at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.